பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 12 சனிக்கிழமை 25.04.2020 கதிர் 171

## 417 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.25

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு பக்கம் 03

# வெலிசறை கடற்படை முகாமில் மேலும் 35பேருக்குக் கொரோனா!



### 400 ஐ தாண்டியது பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை

கொழும்பு,ஏப்.25

வெலிசறை கடற்படை முகாமில் மேலும் 35 கடற்படைச் சிப்பாய்களுக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். பக்கம் 03

## இனிது ரகசியம் அல்ல!

சுகாதார – மருத்துவப் பிரச்சினையான கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான போராட்டம் இலங்கை முழுவதும் கட்டவிழ –

மறுபுறத்தில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அரசியல் சமர் வெடிக்கும் என்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை பக்கம் 03

# நாடாளுமன்றத்தை மீளக்கூட்ட அரசமைப்பில் அதிகாரமில்லை

## மகா சங்கத்தினரிடம் ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.25

புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதை விடுத்து கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுவதற்கான அதிகாரம் அரசமைப்பில் இல்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மகா சங்கத்தினருக்கு எடுத்துரைத்துள்ளார்.

பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி நாட்டை குழப்பமான நிலைக்கு உள்ளாக்கவேண்டியதில்லை என்றும் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டக்கூடாது என்பதே மகாசங்கத்தினரின் ஏகமனதான தீர்மானம் என்றும் மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டினர் என்றும் கூறப்பட்டது. பக்கம் 03





### வெலிசறை முகாமில் உள்ள

# 4 ஆயிரம் கடற்படையினரும் அவர்கள் குடும்பத்தினர்களும் கட்டாயத் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, ஏப்.25

இலங்கையின் பிரதான கடற்படை முகாம்களில் ஒன்றான வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றும் மேலும் 35 சிப்பாய்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த முகாமில் பணியாற்றும் 4 ஆயிரம் கடற்படைச் சிப்பாய்களும் அவர்களின் குடும்பத்தினரும் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெலிசறை கடற்படை முகாமுக்குள் இருக்கும் 150 விடுதிகளில் உள்ளோரும் தனிமைப் பக்கம் 03

# ஊரடங்கை மீண்டும் நீடிக்க ஆலோசனை!

கொழும்பு, ஏப். 25

திடீரென அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலை அடுத்து தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கை நீடிப்பதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது.

நேற்று முன் தினமும் நேற்றும் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் பக்கம் 03

## கொரோனா பீடித்த யுவதிக்கு பிறந்த குழந்தை உயிரிழப்பு

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டு இருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க இதை தெரிவித்தார்.

கொழும்பு சொய்ஸா மகளிர் வைத்தியசாலையில் இந்தக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு நேற்று மாலை பிரசவம் பார்க்கப்பட்டது.

இதன்போது பக்கம் 03

## மத்திய மாகாணத்தில் ஆளுநர் அலுவலகம் மூடப்பட்டது

மத்திய மாகாண ஆளுநரின் அலுவலகமும் கொரோனா தொற்று பீதியால் பூட்டப்பட்டது.

வெலிசறை கடற்படை முகாமில் கொரோனாவைத் தொற்றுக்கு உள்ளான கடற்படை சிப்பாயுடன் ஆளுநரின் பணிமனையில் வேலை செய்த ஊழியர் ஒருவர் பக்கம் 03

## வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினரைக் காணோம்!

### தொண்டமனாறு மயானத்துக்கு முன்பாக அவரது மோட்டார் சைக்கிள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் இலங்கநாதன் செந்தூரனைக் காணவில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவரது மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை, அலைபேசி உள்ளிட்ட உடைமைகள் தொண்டமனாறு மயிலதனை இந்து பக்கம் 03

# மாணவர் மீண்டனர்

நேபாளத்தில் சென்ற நிலையில் அங்கு சிக்குண்ட இலங்கை மாணவர்கள் 93 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

காத்மண்டு நகரத்தில் இருந்து இலங்கை மாணவர்களுடன், ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானம், நேற்றுப் பிற்பகல் 3.27க்கு நாட்டை வந்தடைந்துள்ளது.

இதேவேளை இந்தியாவில் இருந்து 101 மாணவர்கள் நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்டனர். கடந்த 21ஆம் திகதி பாகிஸ்தானில் இருந்து 113 மாணவர்கள் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikathir

# கொரோனாத் தொற்றுப் பரிசோதனை இனி யாழ் போதனா ஆஸ்பத்திரியிலும்!

## மருத்துவ பீடத்துக்கு மேலதிகமாக

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 25

**யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்படும் கொரோனோ ஆய்வு கூடப் பரிசோதனையில் இரவு பகலாக ஈடுபட்டுள்ள அனைவருக்கும் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி பாராட்டுத் தெரிவித் துள்ளார்.**

யாழ் போதனா வைத்திய சாலையில் சந்தேகத்தில் அனுமதிக்கப்படுபவர்கள், இங்கு தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்கள் மற்றும் வடக்கு பிரதேசங்களிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ளவர்கள் என பலருக்கும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலேயே கொரோனோ ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமைய இதுவரையில் ஐந்நூறு பேருக்கு இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவபீட பீடாதிபதி உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் மாணவர்கள் என மருத்துவத் துறைசார்ந்த அனைவரும் இரவு பகலாக பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதே போன்ற ஆய்வு கூடப் பரிசோதனையை யாழ் போதனாவைத்தியசாலையிலும் எதிர்வரும் நாள்களில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக கொரோனோ பரிசோதனையை அதிகளவில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென்று கருதுகின்றோம்.

இதே வேளை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனைகள் மிகவும் பாதுகாப்பான முறையிலையே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அகவே அங்கு பரிசோதனை செய்வதையிட்டு யாரும் அச்சப்படத் தேவையில்லை. குறிப்பாக அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. - என்றார்.

# சுகாதாரத்துறையை உதாசீனப்படுத்தி நாட்டை ஆபத்துக்குள் ஆழ்த்தாதீர்கள்!

## அரசிடம் ரெலோ சுரேந்திரன் மன்றாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

சுகாதாரத்துறையின் வழிநடத்தல் மூலமே கொரோனாவை வெல்ல முடியும், அதிகாரத்தினாலோ ஆயுதத்தாலோ அல்ல என்று தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோவின்) தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமு

உலகநாடுகள் அனைத்தையும் உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் எமது நாடும் பாதிப்படைந்துள்ளது. இந்த நேரத்தில் எமது நாட்டிலிருந்து கொரோனாவை விரைவில் ஒழித்துவிடலாம் என எமக்கிருந்த நம்பிக்கை மெல்ல மெல்ல அருகி வருகின்றது.

ஏற்கனவே உலகநாடுகளில் கொரோனா பரவ ஆரம்பித்த போதே விமான நிலையங்களில் சுகாதாரத்துறையின் கண்காணிப்பின் மூலம் எமது நாட்டிற்குள் கொரோனா வைரஸை வரவிடாமல் தடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் கூட, அதை தவற விட்டாலும் பாடசாலைகளுக்கு விடுமுறையை அறிவித்து, ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி, பாதுகாப்புத் துறையின் முன்னெடுப்பில் வைரஸ் பரவும் வேகத்தை கட்டுப்படுத்தி வந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கொரோனா உச்சத் தொடங்கியுள்ளது.

சில அரசியல் இலாபத்திற்காக சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளை அரசாங்கம் உதாசீனம் செய்து வருவது இந்த நாட்டை மிகவும் ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச்செல்லப் போகின்றது என்ற அச்சம் எழுந்துள்ளது. கொரோனா வைரஸின் பரவலை கட்டுப்படுத்துவதும் தொற்று ஏற்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்யும் பொறுப்பும் கடமையும் சுகாதார துறையினரையே



சாரும். அவர்களே தொற்றுநோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நிபுணத்துவத்தையும், அறிவையும் பெற்றுள்ளார்கள். எனவே அவர்கள் கூறுவதை இந்த அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து நிறைவேற்று அதிகாரத்தையோ இராணுவப் பலத்தையோ பயன்படுத்தி கொரோனாவை கட்டுப்படுத்திவிடலாம் என அரசாங்கம் செயற்படுவது போல் தோன்றுகின்றது. கொரோனா சந்தேக நபர்களை இடம்மாற்றுதல், தனிமைப் படுத்தல்செயற்பாடுகள், ஊரடங்குதளர்வுகள் என்பன சுகாதாரத்துறையின் பங்களிப்பு இன்றி அல்லது அவர்களின் ஆலோசனைகளை மீறி இடம்பெறுவதனால் சில தவறுகள் ஏற்படுவதுடன் அவை மூடி மறைக்கப்படுகின்றன.

குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளருக்குதெரியாமலேஆயிரக்கணக்கான கொரோனா சந்தேக நபர்களை யாழ்ப்பாணத்திற்கு இராணுவம் கொண்டு சென்றுள்ளது. பெரும்பாலான தனிமைப்படுத்தல் முகாம்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியும் வருகின்றன. தற்பொழுது தனிமைப்படுத்தல் முகாம்களிலிருந்தே அதிக நோயாளிகள் இனம்காணப்படுகின்றனர். படையினர் உயிரை வெறுத்து பணியாற்றினாலும் கூட அது சரியான சுகாதார முறைமையிலான தனிப்படுத்தல் நடவடிக்கையா, இல்லையா என்பதனை சுகாதார துறையினர் மேற்பார்வை செய்ய வேண்டும். அவ்வாறு மேற்பார்வையில் ஈடுபடும் சுகாதார துறையினரின் பரிந்துரைகளை இராணுவம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து அரசாங்கம் தங்களது சார்பாக உள்ள சில மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவினரை பக்கத்தில் வைத்துக் கொண்டு நடுநிலையான அரசியல் சார்பற்ற பலரை ஓரங்கட்டி வருவதுடன் தாம் நினைப்பதையே சுகாதார துறையினர் நடைமுறைப்படுத்த வேண்டுமென கருதுவதும் தமது அரசியல் நகர்வுகளுக்கு சாதகமாக சுகாதாரத் துறை செயற்பட வேண்டுமென நினைப்பதும் அபத்தமானவை. சுகாதார அமைச்சரின் முன்னுக்கு பின் முரணான அறிக்கைகள் சிறந்த உதாரணமாகும்.

ஏற்பட்டிருக்கும் சாதாரண நிலை மிகவும் மோசமானது. இதில் யாரும் வீரம் பேச முடியாது என்பது தற்போது வெலிசறை கடற்படை முகாமில் 60 கடற்படையினருக்கு இந்த தொற்று ஏற்பட்டுள்ளதன் மூலம் நிரூபணமாகியுள்ளது.

எனவே ஆட்சி அதிகாரத்தை கொண்டு நோய்க்கிருமிகளை அழித்துவிட முடியாது என்பதனை புரிந்துகொண்டு அரசியல் நிகழ்ச்சிநிரலை விடுத்து எவ்வாறு தேர்தல்கள் காலத்தில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சில முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றதோ, அதே போன்று இந்த நோய் அனர்த்த காலத்தில் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் சுகாதாரத் துறையினருக்கு வழங்கப்பட்டு, அவர்களிற்கு பக்கபலமாக பாதுகாப்பு உட்பட மற்ற துறைகளும் செயல்படுவதன் மூலம் எமது நாட்டையும், மக்களையும் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். - என்று உள்ளது.

# மாலைதீவில் இலங்கையருக்கு கொரோனா

மாலைதீவில் தங்கியுள்ள இலங்கையர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகி யுள்ளது.

உலகின் பல நாடுகளில் நடைமுறையிலுள்ள 'லொக் டவுன்' உத்தரவினால் இலங்கையர் கள் பலர் பல்வேறு நாடுகளில் தங்கியுள்ளனர். அவர்களால் நாடு திரும்ப முடியவில்லை. இலங்கை திரும்ப முடியாமல் மாலை தீவில் சிக்கிய ஒருவர் தற்போது கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

# சட்டமா அதிபர் திணைக்களம் மீள இயங்கும்

சட்டமா அதிபர் திணைக் களத்தின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு உரிய அதிகாரிகளிடம், சட்டமா அதிபரால் அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

பீ.சி.ஆர். பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பாதுகாப்பு ஊழியருக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே, சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீளக் கூட்டுவதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என்று கூறுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டத் தமக்கு விருப்பமில்லை என்று கூறுவது வேறு; அப்படிச் செய்வதற்குத் தமக்கு அதிகாரமில்லை என்று கூறுவது வேறு.

இந்த விவகாரத்துக்காக உயர்நீதிமன்றக் களத்தைத் திறக்கின்ற போது இந்த நிலைப்பாட்டை – கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான அதிகாரம்தமக்கு இல்லைஎன்றநிலைப்பாட்டை – ஜனாதிபதி கோட்டாபய தரப்பு எடுக்குமானால் – எதிர்க்கட்சிகளின் வேலை மிகமிகச் சுலபமாகி விடும்.

அந்த அதிகாரம் அவருக்கு உள்ளது என்பதை உயர்நீதிமன்றத்தில் எடுத்துரைத்து, நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு மெத்தப்படித்த – அனுபவஸ்தரான – ஜனாதிபதி சட்டத்தரணி மட்டத்தில் உள்ள – ஒரு சட்டவாளர் தேவையில்லை என்பது என் கணிப்பீடு.

இலங்கை அரசமைப்பை சாதாரணமாக படித்த ஒரு பிரஜையாலேயே இந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பதை இலகுவாக உயர்நீதிமன்றத்தை ஏற்கச் செய்து விட முடியும். அவ்வளவு தூரத்துக்கு அரசமைப்பில் வெளிப்படையான விவகாரம் இது.

எங்கே அப்படித் தமக்கும் அதிகாரம் இருக்கின்றது என்று கூறிவிட்டால் – அல்லது அதை ஒப்புக் கொண்டுவிட்டால் – எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்று ஒரு தடவை மீளக் கூட்டிப் பாருங்களேன், சரி வராவிட்டால் திரும்ப நாடாளுமன்றத்தைத் தேவைப்பட்ட நேரத்தில் நீங்கள் கலைக்கலாம்தானே என்று பௌத்த மத பீடங்களும் ஏனைய தரப்புகளும் தன்னிடம் கேட்டு விடலாமோ – கோரிக்கை வைத்து விடலாமோ – என்ற பயம் கோட்டாபயருக்கு.

அதனால்தான் நேரத்துடனேயே இவ்விடயத்தில் தமக்கு அதிகாரமில்லை என்ற கயிற்றை அவர் பௌத்த மதபீடத்திடமும் ஏனைய தரப்பிடமும் மெல்ல அவிழ்த்து விடுகின்றார்.

சரி, அது இருக்கட்டும். அந்த விடயம் – அந்தத் தாவா – நீதிமன்றத்தில் தீர்க்கப்படட்டும். அங்குதான் அதற்குத் தீர்வு அல்லது முடிவு என்ற நிலைமை ஓரளவு தீர்க்கமாகிவிட்டது.

ஆகவே அதற்கு அடுத்த விடயத்துக்கு வருவோம்.

போகிற போக்கில் பொதுத்தேர்தல் ஓரிரண்டு மாதங்கள் அல்ல, ஆறு, ஏழு மாதங்கள் தள்ளிப் போனாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

சரி, அப்படித் தள்ளிப் போனால் இப்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டினாலும் அதன் பதவிக் காலம் ஆக ஓகஸ்ட் வரை மட்டும்தானே, அதற்குப் பின்னர் என்ன செய்வீர்கள், இந்த நாடாளுமன்றமே இருக்க முடியாதே என்று சிலர் கேட்கின்றனர்.

இந்தத் கேள்விக்கான விடையைத் தேடி சட்டத்துக்குள் துளாவல் நடத்திய போதுதான் அந்த அதிர்ச்சிதரும் உண்மை ஒன்று அம்பலமானது.

2015 ஜனவரியில் எதிரணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் நின்ற மைத்திரிபால வென்ற போது அவரது பதவிக் காலம் ஆறு ஆண்டுகளாக இருந்தது. அப்போதைய நிலைமையின் படி தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்றத்தின் பதவிக்காலமும் ஆறு ஆண்டுகளாக இருந்தன.

19ஆவது திருத்தத்தின் மூலம் 2015 மத்தியில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜனாதிபதியின் பதவிக்காலத்தை – அதுவும் மக்களிடம் ஆறு ஆண்டு பதவிக்காலத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவரை ஐந்து ஆண்டுகளுடன் வீட்டுக்கு அனுப்பும் திட்டத்தை முன்னெடுத்த போது – அதனை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் (நாடாளுமன்றத்தின்) பதவிக் காலத்தையும் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்க வேண்டிய கட்டாயம் சட்டவாக்கல் உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டது.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின், வெளியில் தோற்றாத சிற்பிகளான ஜெயம்பதி விக்கிரமரட்னவும், சுமந்திரனும் நுணுக்கமான ஒரு சட்டப்பிரிவை ஏனையோருக்குப் புலப்படாத வகையில் அந்த 19ஆவது திருத்தத்துக்குள் வைத்துக் கொண்டனர்.

19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் தான். ஆறு வருட மக்கள் ஆணையுடன் பதவிக்கு வந்த மைத்திரியின் பதவிக் காலத்திலும் கூட ஓர் ஆண்டு வெட்டப்பட்டு அதுவும் ஐந்து ஆண்டுகளாக்கப்பட்டன.

ஆனால், அந்த ஐந்து ஆண்டு மக்கள் ஆணையுடன் வரக் கூடிய நாடாளுமன்றம், ஜனாதிபதி இடையில் புகுந்து கலைக்காவிட்டால் தனது பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளில் இருந்து தேவைகேற்பதான் விரும்பினால் ஆறு ஆண்டுகளாகவும் ஆக்கிக் கொள்ள முடியும்.

அத்தகைய நுணுக்கமான – மிக வலிமையான – சட்ட ஏற்பாடு 19ஆவது திருத்தத்தின் பின்னரும் நமது அரசமைப்பில் இருக்கின்றது. அரசமைப்பை மெத்தப் படித்த யாருக்கும் கூட அது இன்னும் தெரியாது. இப்போது கேட்டாலும் அதற்கு வாய்ப்பு இல்லை என்றே அவர்களில் பலர் கூறுவார்கள்.

அது என்ன சட்டப்பிரிவு? நாளை அதை ஆதாரத்துடன் உங்கள் முன் வைக்கிறேன்.

நாங்கள் நினைத்திருந்தால் எங்கள் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளைத் தாண்டி ஆறாவது ஆண்டு முழுவதும் கூட நீட்டியிருக்க முடியும் என்பதை உணராமல் – அல்லது இதுவரை அதை அறியாமல் – எம்.பிக்களாக இருந்தவர்கள் கூட இப்போது அதனை அறியும்போது மூக்கில் விரலை வைப்பார்கள்.

சரி, இந்த சட்ட ஏற்பாட்டை மற்றவர்கள் அதிகம் அறியாமல் – அல்லது புரிந்து கொள்ளாமல் – இருக்கத்தக்கதாக 19 ஆவது திருத்தின் ஊடாக அரசமைப்புக்குள் நுணுக்கமாகச் சொருகிய ஜெயம்பதி விக்கிரமரத்ன, சுமந்திரன் போன்ற அந்த அரசமைப்புத் திருத்தத்தின் சிற்பிகள் – பிதாமகர்கள் – உண்மையில் நரித் தந்திரசாலிகளா? அல்லது சட்டத்துறை சாணக்கியர்களா?

நாளை இந்த சட்ட ஏற்பாடு பற்றிய எனது விளக்கத்தின் பின்னர் வாசகர்களாகிய நீங்களே முடிவு செய்து கொள்ளுங்களேன்...!

–மின்னல்–

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் சட்டவாக்கங்களை முன்னெடுக்க நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி பௌத்த மகா சங்கத்தினருக்குத் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டது.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து மூன்று நிக்காயக்களையும் சேர்ந்த மகாசங்கத்தினருக்கு விளக்கினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தல், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், மக்களுக்கு வழங்கிய நிவாரணங்கள் மற்றும் எதிர்காலத்தில் சுதேச பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

நாடு முகம்கொடுத்துள்ள சவால்களுக்கு மத்தியில் சுகாதார, பாதுகாப்பு துறைகளும் முழு அரச இயந்திரம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டத்தக்கதாக இருந்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தனக்குப் பெரும் மக்கள் ஆணையொன்றை வழங்கி மக்கள் தன் மீது வைத்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் பலமானதெரு நாடாளுமன்றத்தின் தேவையை விளக்கிய ஜனாதிபதி, புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதை விடுத்து பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் அரசமைப்பில் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை மகாசங்கத்தினரைச் சந்திப்பதற்கு தான் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கு மூன்று நிக்காயக்களினதும் மகாசங்கத்தினருக்கு அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி பதவியை ஏற்ற போது ருவன்வெலிசேயவிலும் ஜனாதிபதி கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட வேளையிலும் தான் குறிப்பிட்டமையைப் போன்று மகாசங்கத்தினரின் ஆசீர்வாதம் மற்றும் வழிகாட்டல்களை மனமுவந்து எதிர்பார்க்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைத்து மகாசங்கத்தினரினதும் முழுமையான ஆசீர்வாதம் ஜனாதிபதி தலைமையிலான அரசு முன்னெடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளது என்று இதன்போது கருத்துத் தெரிவித்த மகா சங்கத்தினர் தெரிவித்தனர்.

பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி நாட்டை குழப்பமான நிலைக்கு உள்ளாக்கவேண்டியதில்லை என்றும் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டக் கூடாது என்பது மகாசங்கத்தினரின் ஏகமனதான தீர்மானம் என்றும் மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

முன்னர் இருந்த நாடாளுமன்றம் நாட்டின் தற்போதைய நிதிப் பிரச்சினைக்கு வகை கூறவேண்டும் என்று மல்வத்தை பீடத்தின் அநுநாயக தேரர் சங்கைக்குரிய நியங்கொட விஜிதசிறி தேரர் குறிப்பிட்டார்.

வைரஸ் ஒழிப்புக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நோக்கும் போது புதியதொரு சிந்தனையொன்று நாட்டில் நடைமுறையாவது தெளிவாகிறது. அது 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திற்கு 'சுபீட்சத்தின் சிந்தனை' என இணைக்கப்பட வேண்டிய உப பிரிவாகும் என அமரபுர ஸ்ரீ தர்மரக்சித நிக்காயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய திருக்குணாமலயே ஆனந்த தேரர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் ஒழிப்பில் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களில் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பாடம் கற்றுக்கொள்ள முடியும் என்று பேராசிரியர் சங்கைக்குரிய மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டார்.

நாட்டின் இளைய தலைமுறை மற்றும் பல்வேறு குழுக்கள் பல புத்தாக்கங்களை செய்துள்ளனர். அவை எதிர்காலத்திற்கு வழிகாட்டும் பொன்னான சந்தர்ப்பம் என்றும் ஜனாதிபதியின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மகா சங்கத்தினர் தொடர்ந்தும் பலமாக இருப்பார்கள் என்றும் தேரர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் சங்கைக்குரிய இந்துராகாரே தம்மரத்ன தேரர் தாய்நாட்டை பாதுகாப்பதற்கு உதவும் 12 விடயங்களை உள்ளடக்கிய முன்வொழிவொன்றை முன்வைத்தார்.

இம்முறை வெசாக் பண்டிகையை இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி வீட்டிலிருந்தவாறு கொண்டாடுவதற்குத் தேவையான பின்புலத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை கலாநிதி சங்கைக்குரிய திவியகஹ யஸஸ்ஸி தேரரும் பேராசிரியர் தும்புல்லே சீலகந்த தேரரும் சுட்டிக்காட்டினர். அதற்காக குழுவொன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து மக்களினதும் பசியைப் போக்குவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளை மகாசங்கத்தினர் பாராட்டுகின்றனர் என அஸ்கிரி பீடத்தின் அநுநாயக தேரர் சங்கைக்குரிய வெண்டருவே உபாலி தேரர் குறிப்பிட்டார்.

மூன்று நிகாயக்களினதும் மகாசங்கத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தி மகா நாயக்க தேரர்கள் மற்றும் அநுநாயக தேரர்கள் உள்ளிட்ட தேரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது.

## 417 பேருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 417ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்று மட்டும் 49 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 35 பேர் கடற்படைச் சிப்பாய்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

109 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுதிரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். 301 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஊரடங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதி ஆகியோரைச் சந்திக்கவுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் கலந்துரையாடல் நடத்த உள்ளனர். இதன்பின் ஊரடங்கு தொடர்பான விசேட அறிவித்தல் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிறந்த சிசு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நெருங்கிய தொடர்பை வைத்திருந்தமையை அடுத்தே ஆளுநர் காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

## வெலிசறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 417ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

இதன்படி மொத்தமாக 65 கடற்படையினர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படைச் சிப்பாய் ஒருவருக்கு கொரோனா வைரஸ் பரவியதையடுத்து நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரசோதனை மூலம் மேலும் 29 கடற்படையினருக்கு வைரஸ் பரவியமை கண்டறியப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்று மேலும் 35 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளமை கண்டறியப்பட்டது.

வெலிசறை கடற்படை முகாம் முடக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு தொடர் பரிசோதனைகள் இடம்பெறுவதுடன், முகாமில் இருந்து விடுமுறையில் சென்றவர்களை அழைத்து வருவதற்கான விசேட வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## வலி.கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மயானத்துக்கு அருகாமையில் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவத்தையடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். பிரதேச சபை உறுப்பினரின் உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டோர் அவரைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தொண்டமனாறு மயிலதனை இந்து மயானத்துக்கு அண்மையாக கடற்கரைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்பதை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நேற்றிரவு 7.20 மணியளவில் கண்டுள்ளனர்.

அது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அவர்கள் தகவல் வழங்கினர். நேற்றிரவு 8.30 மணியளவில் அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார், அங்கு காணப்பட்ட மணிப்பையிலிருந்த (பேர்ஸ்) தேசிய அடையாள அட்டையை வைத்து கோப்பாயைச் சேர்ந்த இலங்கநாதன் செந்தூரன் (வயது – 37) என்பவருடையது என்று உறுதி செய்தனர்.

அதன் பின்னர் அவரது மோட்டார் சைக்கிள், இயக்கம் நிறுத்தப்பட்ட அலைபேசி, முகக்கவசம், தலைக்கவசம் உள்ளிட்டவற்றை பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் செந்தூரனின் வீட்டுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் உறவினர்கள், செந்தூரனின் நண்பர்களுடன் தொண்டமனாறு பகுதியில் தேடிவருகின்றனர்.

அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியவில்லை என்று உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் செந்தூரன் மக்களுக்கான உதவிப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

## 4 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உறுதிப்படுத்தினார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## சு.கவின் தலைவரும் செயலாளரும் சாடிக்கு ஏற்ற மூடிகள் தாம்!

"சாடிக்கு ஏற்ற மூடி என்பார்கள்' ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரையும் செயலாளரையும் நோக்குகின்ற போது அப்படித்தான் எண்ணத் தோன்றுகின்றது.

அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அக்கட்சியின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் தயாசிறி ஜயசேகரா.

இப்போது நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான சட்ட விவகாரங்களில் அவர் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றமையை அவதானிக்கும் போது தமது கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கனகச்சிதமாக அவர் பொருந்துகின்றார் என்றே தோன்றுகின்றது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீளக் கூட்டும் விடயத்தில் ஜனாதிபதிக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் (உயர்) நீதிமன்றுக்குக் கிடையாது என்ற பாணியில் அவர் பகிரங்கமாக கருத்து வெளியிட்டிருக்கின்றார் – அதுவும் தாமும் ஒரு சட்டத்தரணி என்ற அறிமுகத்துடன்.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்கள், முடிவுகளில் உயர்நீதிமன்றம் எவ்வாறு தலையிட்டுக் குட்டு வைக்கும் என்பதை 2018 கடைசிப் பகுதியில் முதல் தடவையாக நேரடியாகப்பட்டு அனுபவித்துக் கெட்டழிந்தவர் அவரின் கட்சித் தலைவராக வீற்றிருக்கும் அவரது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான்.

2018இல் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து, புதிய பொதுத் தேர்தலுக்கும், புதிய நாடாளுமன்றத்தின் அமர்வுக்கும் இதேபோன்றுதான் திகதி நிர்ணயித்தார் அவரது கட்சித் தலைவராக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தில் தலையிட்டு, நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான அவரது கட்டளையை ரத்துச் செய்து, அதுவரை அவரால் கலைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட இதே நாடாளுமன்றத்தைப் புனர்ஜென்மம் எடுக்க வைத்து இயங்கச் செய்ததே இதே நீதிமன்றம்தான்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவில் தலையிட்டு அப்போது அந்த உத்தரவை அடியோடு தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்தான். அதை தயாசிறி ஜயசேகர மறந்து விட்டார் போலும். அதனால்தான் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிராக சுமந்திரன் போன்றோர் நீதிமன்றத்தை நாடினாலும் அதில் தலையிடும் உரிமை நீதிமன்றுக்கு இல்லை என்று 'கதைவிடுகின்றார்' அவர்.

இவ்விடயத்தில் நீதிமன்றத்தை நாடும் திட்டத்தில் கூட சுமந்திரன் உட்பட்ட எதிர்க்கட்சித் தரப்பினர் கனகச்சிதமாக, நாசூக்காகக் காய் நகர்த்துகின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

*"நீங்கள் கலைத்த நாடாளுமன்றத்தைத் தயவு செய்து மீளக் கூட்டுங்கள். பொதுத் தேர்தல் வைக்கக் கூடிய சூழல் இப்போது இல்லை. இந்தச் சமயத்தில் நாட்டின் முக்கிய மூன்று தூண்களும் – சட்டவாக்கல் துறை, நிறைவேற்றதிகாரம், நீதித்துறை ஆகியவை – ஒத்திசைந்து, ஒன்றிணைந்து செயற்படுவது அத்தியாவசியமாகும். அதற்கு நாடாளுமன்றம் இயங்க வேண்டும். அப்படிக் கூட்டும் நாடாளுமன்றத்தை எந்த வித இடைஞ்சல்கள், குழப்பங்களின்றி முன்னெடுப்பதை நாம் உறுதி செய்கின்றோம்"* – இப்படி எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு ஆளும் தரப்புக்கு உறுதியளிக்கும் உடன்பாட்டை எழுத்தில் வழங்குவதற்குத் தயார் எனத் தெரிகின்றது.

அதாவது இவ்விடயத்தில், நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு எல்லாவித வழிவகைகளையும் முயற்சித்து, அவை எவையும் சரிவராத பின்னணியில்தான் இறுதியாக நீதிமன்றத்தை நாடுகின்றோம் என்ற நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் முன்வைப்பதே எதிர்க்கட்சியின் ஒரே எத்தனமாகத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும், இவ்விடயத்தை எதிரணிகள் உயர் நீதிமன்றுக்குக் கொண்டு போகும் எனில், அதில் தலையிட்டு உத்தரவிடும் நியாயாதிக்கம் தமக்கு இல்லை என்ற காரணத்தைக் காட்டி நீதிமன்றம் தலையிடாமல் ஒதுங்குவதற்கான வாய்ப்புகள் – சந்தர்ப்பங்கள் – மிகமிக் குறைவு, அரிது என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் காலத்தில் இதே விடயத்தில் தலையிட்டு, உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதியரசர்களும் ஏகமனதாக ஒரு தீர்ப்பை அறிவித்து, மைத்திரிபாலவின் முடிவு தொடர்பில் அவருக்குக் குட்டு வைத்தமையை அவரின் கட்சியின் செயலாளர் ஜயசேகர இப்போது மறந்து கதையளக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

# தமக்குக் கொரோனா தொற்றி இருப்பது தெரியாமல் பல வாகனங்களிலும் தொற்றித் தொற்றி வந்தாராம்!

## வெலிசறை கடற்படையின் முதல் தொற்றாளர் குறித்துத் தகவல்

கொரோனா தாக்கத்தினால் வெலிசறை கடற்படை முகாம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த முகாமின் 65 கடற்படையினர் கொரோனா தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

வெலிசறை முகாமிலிருந்து சிப்பாயொருவர் விடுமுறையில் பொலன்னறுவையிலுள்ள புலஸ்திகவிலுள்ள வீட்டிற்கு சென்றிருந்தபோது, கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டது.

அவர் பொலன்னறுவையிலுள்ள தனது வீட்டிற்கு செல்வதற்கு முன்னர் வேறு பலருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற அச்சம் எழுந்துள்ளது.

அவர் கடந்த 18ஆம் திகதி முகாமிலிருந்து விடுமுறையில் புறப்பட்டுள்ளார். முகாமிலிருந்து விடுமுறைக்கு புறப்பட்ட சக சிப்பாய்களுடன், கடற்படை முகாமிற்கு சொந்தமான வாகனத்தில் கொழும்பிற்கு வந்துள்ளார்.

ஊரடங்கு சட்டம் நாடு முழுவதும் அமுலில் இருந்ததால், பல வாகனங்களில் ஏறி அவர் தனது வீட்டிற்கு சென்றுள்ளார்.

கொழும்பிலிருந்து பஸ் ஒன்றில் வறக்காப்பொல வரை வந்துள்ளார். பின்னர் முச்சக்கர வண்டியொன்றில் அலவ்வ நகரத்திற்கு சென்றார். அலவ்வவிலிருந்து குருநாகலிற்கு இன்னொரு வாகனத்தில் சென்றிருந்தார்.

குருநாகல் சந்தியில் காத்திருந்தபோது, தம்புள்ளைக்கு மரக்கறி வாங்க சிறிய லொறியொன்று வந்துள்ளது. அதை மறித்து, அதன் பின்பக்கத்தில் ஏறியுள்ளார். ஏற்கனவே 4,5 பேர் லொறியின் பின்பகுதியில் இருந்துள்ளனர்.

தம்புள்ளை நகரத்திற்கு வந்து, வாகனங்கள் இல்லாமல் சிறிது நேரம் அங்கேயே காத்திருந்தார்.

மின்னேரியா அரசி ஆலைக்கு செல் லும் லொறி ஒன்றில் ஏறி, மின்னேரியா நகரத்திற்கு சென்றார். அங்கிருந்து எந்த வாகனமும் இல்லையென்பதால், ஹிங்குரகொடை வரை கிட்டத்தட்ட 5 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தை நடந்து கடந்துள்ளார்.

பொலன்னறுவை வந்து, புலஸ்திகவிலுள்ள அபயபுரவிலுள்ள தனது வீட்டிற்கு முச்சக்கர வண்டியில் சென்றுள்ளார். அங்கும் சிறிது தூரம் நடந்து சென்றார்.

பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரத் ஜெயசிங்க இதனை தெரிவித்தார். லொறி மற்றும் முச்சக்கர வண்டியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளன. லொறி சாரதி மற்றும் உதவியாளர், முச்சக்கர வண்டிச் சாரதி ஆகியோர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# கொக்கட்டிச்சோலை முதலைக்குடா களப்பில் கசிப்பு தயாரிப்பு நிலையம் அதிரடி முற்றுகை

## பெரும் தொகையான உபகரணங்கள், கோடா மீட்பு







கொக்கட்டிச்சோலை,ஏப்.25

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலைக்குடா ஆற்றை அண்டிய களப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்று நேற்று வெள்ளிக்கிழமை முற்றுகை செய்யப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலைமையில், முதலைக்குடா கிராம அமைப்புக்கள், கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து இந்நிலையத்தை முற்றுகையிட்டு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் கோடா போன்றவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது கோடா, கசிப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் வறல், சிலிண்டர், கொள்கலன், அடுப்பு போன்ற உபகரணங்க ளையும் கைப்பற்றியமையுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அண்மைக் காலமாக முற்றுகையிடப்பட்டு வருகின்றன. இதன்போது பெருமளவிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் மதுபான விற்பனை நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளமையால் கசிப்பு உற்பத்தி அதிகரித்திருப்பதாக சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், இவ்வாறான உற்பத்தி நிலையங்களை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையும் அனைத்து தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணை யுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு: 076 443 8623

தகவல் – நிர்வாகி
பசுமை ஊடகம்

# அமெரிக்காவின் பொருளாதாரத்தை மீட்கும் வரை ஓயமாட்டாராம் ட்ரம்ப்

கொரோனா வைரஸ் பெயரால் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, அதனால் பாதிக்கப்பட்ட அமெரிக்கப் பொருளாதார வளத்தை முழுமையாக மீட்டெடுக்கிற வரையில் ஓய மாட்டேன் என்று டிரம்ப் ஆவேசமாக கூறினார்.

வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் டிரம்ப், புதன் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அப்போது அவரிடம் கொரோனா வைரசுக்கு எதிரான போரில் அமெரிக்கா பல லட்சம் கோடி டாலர் மதிப்பிலான நிதி சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்தியதால், நாட்டின் கடன் பெருகி இருப்பது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அந்தக் கேள்விக்கு டிரம்ப் விரிவாகப் பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:–

அமெரிக்கா (கொரானா வைரஸ் பெயரால்) தாக்கப்பட்டுள்ளது. இது ஒரு தாக்குதல்தான். இது காய்ச்சல் மட்டுமல்ல, இதுபோன்ற ஒன்றை யாரும் பார்த்தது இல்லை. கடைசியாக (முதல் உலகப்போரின்போது) 1917 இல்தான் இப்படி நடந்ததை பார்த்தோம்.

நமக்கு இப்போது வேறு வழி இல்லை. எல்லாவற்றையும் பற்றி எப்போதுமே நான் கவலைப்படுகிறேன். நாம் பிரச்சினை இதுதான் என முடிவு செய்தாக வேண்டும். உலகிலேயே நமது பொருளாதாரம்தான் மிகப்பெரியது. சீனாவை விட, உலகின் பிற நாடுகளை விட நமது பொருளாதாரம்தான் பெரியது. கடந்த 3 ஆண்டுகளில் இந்தப் பொருளாதாரத்தை நாம் கட்டமைத்தோம்.

ஆனால் ஒரே நாளில் அவர்கள் வந்து விட்டனர். நீங்கள் அதை மூட வேண்டும் என்று கூறி விட்டனர். நாம் மீண்டும் அதைத் திறக்கத்தான் போகிறோம். நாம் மீண்டும் வலுவான நிலைக்கு போவோம்.

நாம் நமது விமான நிறுவனங்களை பாதுகாத்தோம். நாம் நிறைய நிறுவனங்களைக் காத்தோம். அவைதான் சிறந்த நிறுவனங்களாக 2 மாதங்களுக்கு முன் உருவெடுத்தன. ஆனால் ஒரே நாளில் அவற்றுக்கான சந்தை மூடப்பட்டது.

தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதல் குறையத்தொடங்கி உள்ளது.

இந்தப் போக்கானது, கொரோனா வைரசுக்கு எதிரான நமது உத்திகள் சரியானவை என்பதைத்தான் காட்டுகிறது. பல மாகாணங்களும் பாதுகாப்பாக பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கப்போகின்றன. அது மிகவும் உற்சாகம் அளிப்பதாக இருக்கிறது.

அமெரிக்க பொருளாதார வளங்களை நான் முழுமையாக மீட்டெடுக்கிற வரையில் ஓய மாட்டேன். நான் இதை நம்புகிறேன். முன்பைவிட நமது பொருளாதாரத்தை உயர்த்தப்போகிறோம். நிறைய புத்திசாலிகள் அதைப் பார்க்கிறார்கள். பந்தயம் கட்டுகிறார்கள். பங்குச்சந்தையில் என்ன நடக்கப்போகிறது என்பதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். – இவ்வாறு டிரம்ப் கூறினார்.

அமெரிக்கா, கொரோனா வைரசுக்கு எதிரான போரில் சிகிச்சைகளுக்காக, சோதனை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, 7 பில்லியன் டொலர் தொகையை (சுமார் ரூ. 52 ஆயிரத்து 500 கோடி) திருப்பி விட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் உயிரிழப்பு 50 ஆயிரத்தைக் கடந்தது!

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 50 ஆயிரத்தைத் தாண்டியது.

வைரஸ் பரவியவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் உலக அளவில் அமெரிக்காவே தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டில் 8 லட்சத்து 89 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் பரவியுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் இதுவரை 89 ஆயிரத்து 750 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். .

தொற்றால் 50 ஆயிரத்து 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா அளவிற்கு வேறு எந்தவொரு நாட்டிலும் பாதிப்பும் உயிரிழப்பும் ஏற்படவில்லை.

நேற்று மட்டும் அங்கு 2 ஆயிரத்து 342 பேர் உயிரிழந்தனர். 31 ஆயிரத்து 900 பேருக்கு கொரோனா தொற்றுப் புதிதாகக் கண்டறியப்பட்டது.

நியூயோர்க் மாநிலமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட பாதியளவு உயிரிழப்புக்கள் இந்த ஒரு மாநிலத்திலேயே நிகழ்ந்துள்ளன. 2 லட்சத்து 69 ஆயிரம் பேர் இந்த மாநிலத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 20 ஆயிரத்து 861 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

நியூயோர்க்கை அடுத்து நியூ யேர்சி மாநிலமம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு லட்சத்து 25 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 5 ஆயிரத்து 428 பேர் அங்கு உயிரிழந்திருக்கின்றனர்.

நாட்டிலுள்ள 50 மாநிலங்களிலும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

## கொரோனா, மலேரியா என இரு முனைத் தாக்குதலுக்குள் சிக்கி சிம்பாப்பே திண்டாட்டம்

சிம்பாப்வே நாட்டில் மலேரியாவும், கொரோனாவும் ஒரே நேரத்தில் மக்களைத் தாக்கி வருவதால் அங்கு மனிதப் பேரவலம் ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கப்படுகிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாப்வே கடந்த 10 ஆண்டுகளாகவே கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

சுமார் 1.5 கோடி மக்கள் தொகை சிம்பாப்வேயில் தற்போது மலேரியா நோய் வேகமாக பரவி வருகிறது. வழக்கமாக பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் மலேரியா அந்த நாட்டை ஒரு கை பார்க்கும். சில ஆண்டுகளில் இதன் தாக்கம் சற்று குறைவாகவும் காணப்படும்.

இந்த வருடத்தில் இதுவரை, (அதாவது கடந்த 3 மாதங்களில்) மலேரியாவால் 153 பேர் உயிரிழந்து விட்டனர். மேலும் 1.35 லட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மலேரியாவால் உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் வேறு சிம்பாப்வேயை அச்சுறுத்தத் தொடங்கி இருக்கிறது. அங்கு தற்போதுவரை கொரோனா அதிகமாகப் பரவவில்லை. இனி வேகமாகப் பரவலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இதுவரை கொரோனாவால் 28 பேர் பாதிக்கப்பட்டும் 3 பேர் உயிரிழந்தும் உள்ளனர்.

முன்னதாக, உலக சுகாதார நிறுவனம் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து அதிபர் எமர்சன் மாங்காக்வா தனது நாட்டில் மார்ச் மாத இறுதியில் 3 வார கால ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

கடந்த 19ஆம் திகதி முதல் மேலும் 2 வாரத்துக்கு ஊரடங்கை அவர் நீட்டித்துள்ளார். இதன் காரணமாக ஒரு கோடி மக்கள் வேலையை இழந்து வருமானமின்றிப் பட்டினி கிடக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் அதிக உயிர்ப்பலி வாங்கப்போவது வறுமையா? மலேரியாவா? கொரோனாவா? என்ற அச்சத்தில் சிம்பாப்வே மக்கள் உறைந்துபோய் உள்ளனர்.

## உலக சுகாதார நிறுவனத்திற்கு 20 மில்லியன் டொலர் நிதி!

### மேலதிகமாக வழங்குகிறது சீனா

கொரோனா வைரஸ் கோரத் தாண்டவம் ஆடிவரும் நிலையில் உலக சுகாதார அமைப்பிற்குக் மேலதிகமாக 30 மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்க உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது 210 நாடுகளுக்கு பரவியுள்ள இந்த வைரசால் 27 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொடிய வைரசுக்கு ஒரு லட்சத்து 93 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், உலகளாவிய சுகாதாரம் தொடர்பான விவகாரங்களையும் 'டபிள்யூ.எச்.ஓ' எனப்படும் உலக சுகாதார அமைப்பு கையாண்டு வருகிறது.

சுவிஸ்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்பாகும்.

இந்த அமைப்பில் இந்தியா, அமெரிக்கா, சீனா உள்பட 194 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இத்தனை நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா அதிக நிதியுதவி செய்து வந்தது.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் விவகாரத்தில் உலக நாடுகளுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கவில்லை எனவும், வைரஸ் தொடர்பான தகவல்களை மறைத்து சீனாவுக்கு ஆதரவாக செயல்பட்டதாக உலக சுகாதார அமைப்பு மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

மேலும், அந்த அமைப்புக்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதியையும் அதிபர் டிரம்ப் நிறுத்தி வைத்துள்ளார்.

உலக சுகாதார அமைப்புக்கு வழங்கி வந்த நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ள நிலையில் அந்த அமைப்புக்கு சீனா கூடுதல் நிதி வழங்கியுள்ளது

## ஈரானியப் படகுகளைத் தொட்டால் அமெ. கப்பல்கள் மூழ்கடிக்கப்படும்

### ட்ரம்பின் உத்தரவுக்கு ஈரான் தளபதி பதிலடி

ஈரானின் கடற்படைப் படகுகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் வளைகுடாவில் இருக்கும் அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்படும் என்று ஈரானின் புரட்சிகர காவலாளிப் படையின் தலைவர் மேஜர் ஜெனரல் ஹுசைன் சலாமி எச்சரித்துள்ளார்.

ஈரானியக் கற்படைப் படகுகள் அமெரிக்கக் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக நடந்துகொண்டால் அவற்றை அழித்துவிடுங்கள் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது கடற்படைக்கு உத்தரவிட்டிருந்தார்.

அப்படி ஏதேனும் நடந்தால் வளைகுடாப் பகுதியில் இருக்கும் அமெரிக்க கப்பல்கள் மூழ்கடிக்கப்படும் என்றார் சலாமி.

எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு ஏதேனும் ஊறு விளைந்தால், மிக மோசமாக எதிர்வினையாற்றுவோம். அவர்களுக்கு எங்களின் வலிமைப் பற்றித் தெரியும். முந்தைய சமயங்களில் நாங்கள் கொடுத்த பதிலடியிலிருந்து பாடம் கற்றிருப்பார்கள்" – என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே 2018 முதல் மீண்டும் போர் மேகம் மூண்டுவந்த நிலையில், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஈரானின் முக்கிய போர் தளபதி காசிம் சுலைமானியை அமெரிக்கா ஏவுகனைத் தாக்குதல் நடத்தி கொன்றது.

அதைத் தொடர்ந்து ஈராக்கில் இயங்கிவரும் அமெரிக்க படைத் தளத்தின் மீது ஈரான் ஏவுகணைத தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பலத்த காயம் அடைந்தனர். கடந்த 78 ஆண்டுகளில் அமெரிக்கப் படைகள் மீது நேரடியாக ஈரான் நடத்திய தாக்குதலாகும் அது. இந்நிலையில் மீண்டும் இவ்விரு நாடுகள் உரசிக்கொள்கின்றன.

# 3 நகரங்களில் 4 நாள்கள் முழுமையான ஊரடங்கு

## தமிழகத்தில் அறிவிப்பு



சென்னை, கோவை, மதுரை ஆகிய 3 நகரங்களிலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் புதன்கிழமை வரை முழுமையான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஞாயிறு காலை 6 மணி முதல் புதன் இரவு 9 மணிவரை முழுமையான ஊரடங்கு அமலில் இருக்கும். மேலும் சேலம், திருப்பூரில் ஏப்ரல் 26 முதல் ஏப்ரல் 28 வரை முழுமையான ஊரடங்கு அமல்படுத்தப்படும்.

முழுஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட 5 மாநகராட்சிகள் தவிர மற்ற மாநகராட்சிகளில் வழக்கமான கட்டுப்பாடுகள் தொடரும். கொரோனா தொற்று பரவலை தடுக்க நகர்ப்புறங்களில் கட்டுப்பாடுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முழுமையான ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள மட்டுமே அனுமதி. மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் போன்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகளுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

அம்மா உணவகங்கள், ஏடிஎம் போன்றவை வழக்கம் போல் செயல்படும். கோயம்பேடு போன்ற மொத்த காய்கறி சந்தைகள் விதிமுறைகளின் படி செயல்படும். அதேபோல் காய்கறி, பழங்கள் போன்றவற்றை விற்பனை செய்ய நடமாடும் கடைகள் மட்டும் அனுமதிக்கப்படும்

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கொரோனா அச்சத்தின் மத்தியில் 7 வயதுச் சிறுமி மீது வன்முறை!



நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் மத்திய பிரதேசத்தில் கை, கால்களை கட்டி 7 வயது சிறுமி கடத்தி வன்புணரப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜபல்பூர் மாவட்டம் தாமோக் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் 7 வயது சிறுமி தனியாக இருந்தார். அதே பகுதியை சேர்ந்த 20 வயதான சச்சின் சென் என்பவர் அந்தச் சிறுமியை கடத்திச் சென்று அங்குள்ள காட்டுப் பகுதியில் கை, கால்களை கட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளான்.

பின்னர் அந்த சிறுமியின் கண்களை அவன் கத்தியால் குத்தி விட்டு தப்பி ஓடினான். சிறுமியை மீட்ட கிராம மக்கள் சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்தனர். மருத்துவர்கள் சிறுமிக்கு மீண்டும் பார்வையை கொண்டுவர கடுமையாக போராடி வருகிறார்கள்.

இந்த சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் குற்றவாளியை உடனே கைது செய்ய போலீசாருக்கு உத்தரவிட்டார். அதோடு சிறுமிக்கு சிறந்த மருத்துவ வசதி அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து தீவிர தேடுதல் நடத்திய பொலிஸார் சச்சின் சென்னைக் கைது செய்தனர்.

# இரண்டடி விலகியிரு கிராமங்களின் மந்திரம்

சமூக விலகல் என்பதை எளிமையாக வரையறுக்க, '2 அடி விலகியிரு' என்ற மந்திரத்தை கிராமங்கள் நமக்கு வழங்கியிருப்பதாக இந்தியப் பிரதமர் மோடி பேசினார்.

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை முன்னிட்டு, நாடு முழுவதிலும் உள்ள பஞ்சாயத்து தலைவர்களுடன் பிரதமர் மோடி நேற்றுக் காணொலி காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் தடுப்பு பணிகள் தொடர்பாக மோடி பேசியதாவது:-

கொரோனா வைரஸ் பரவல் அனைவருக்கும் படிப்பினையாக



அமைந்துள்ளது. நாம் சுய சார்புடையவர்களாக மாற வேண்டும் என்று கற்பித்திருக்கிறது. கொரோனா வைரஸ் பரவல் நாம் அனைவரும் வேலை செய்யும் முறையையே மாற்றிவிட்டது. நாம் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்பதை கொரோனா பரவல் சுட்டிக்காட்டி உள்ளது.

கொரோனா வைரசை எதிர்த்துப் போராடுவதற்கு, சமூக விலகல் என்பதை எளிமையாக வரையறுக்க, '2 அடி விலகியிரு' என்ற மந்திரத்தை கிராமங்கள் நமக்கு வழங்கி உள்ளன. தனி நபர் இடைவெளி மூலம் இந்தியா கொரோனாவை எப்படி கட்டுப்படுத்துகிறது என்பதை உலகமே உற்று நோக்குகிறது.- இவ்வாறு அவர் பேசினார்.

# கொரோனாவால் இறப்பவர்களின் உடலை எங்கள் இடத்தில் அடக்கம் செய்யுங்கள்

## பிரதமருக்குத் தமிழக மாணவி கடிதம்

வாடிப்பட்டி,ஏப்.25

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கச்சைகட்டி பெருமாள்கோவில் தெருவைச் சேர்ந்த பாரதிதாசன் மகள் தென்னரசி. வாடிப் பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

அவர் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் நோயிலிருந்து நாட்டுமக்களை காப்பாற்ற தாங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளை உலக சுகாதார அமைப்பு பாராட்டி வருகிறது. இந்நிலையில் தமிழகத்தில் கொரோனா வார்டில் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கு நோய் தொற்று ஏற்பட்டு மரணம் அடைந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இதனால் இரவும் பகலும் பாடுபடும் மருத்துவர்கள் மனவேதனையில் உள்ளனர்.

எனது தந்தை சிறு குறு விவசாயி. எங்களுக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் கொரோனா சிகிச்சைக்கு பணிபுரிந்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர், ஊடகத்துறையினர், துப்புரவு பணியாளர்கள் யாராவது நோய் தொற்று ஏற்பட்டு மரணமடைந்தால் அவர்களின் உடலை எங்கள் நிலத்தில் அடக்கம் செய்ய எனது தந்தை, தாயாரின் ஒப்புத லின்பேரில் சம்மதம் தெரிவித்து பயன் படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். - இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டு உள்ளது.

# சிங்கப்பூர் பிரதமருடன் மோடி பேச்சு

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சிங்கப்பூர் பிரதமருடன் இந்தியப் பிரதமர் மோடி தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி கடந்த சில வாரங்களாக தொடர்ந்து ஆலோசித்து வருகிறார்.


இந்த நிலையில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சிங்கப்பூர் பிரதமருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக, பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில், கொரோனா பெரும் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்கள் மற்றும் சுகாதார சவால்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர் என தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் கொரோனா 1755 ஆக உயர்ந்தது

தமிழக அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட தகவலின்படி, தமிழகத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1683 ஆக இருந்தது. இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை நேற்று 1755 ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கொரோனா வைரசால் நேற்று மேலும் 72 பேர் பாதிப்பு அடைந்துள்ளனர். இதையடுத்து கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 1755 ஆக உயர்ந்துள்ளது - என தெரிவித்துள்ளது.



# கடும் உழைப்பாளிகள் 30% பேரை இந்தியாவில் கொரேனா தாக்கும்!

இந்தியாவில் 15 வயதில் இருந்து 64 வயதுக்கு உட்பட்டவர்கள் உழைப்பில் ஈடுபடுபவர்களாக உள்ளதால் இவர்களில் 30 சதவீதம் பேருக்கு கொரோனா தாக்கும் அபாயம் உள்ளது என்று ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

இங்கிலாந்து லண்டனில் உள்ள ஹைஜின் மற்றும் டிராபிக்கல் மெடிசன் கல்வி மையத்தினர் கொரோனா பாதிப்பு தொடர்பாக உலகளாவிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர். அதில் கொரோனாவுக்கு விரைவில் தடுப்பு மருந்து கண்டுபிடிக்காவிட்டால் இந்த நோய் பரவுதல் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தொடர்ந்து அதிகரித்து கொண்டே இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் 170 கோடி பேர் இதனால் பாதிப்படைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. இது உலக மக்கள் தொகையில் 22 சதவீதம் ஆகும்.

மேலும் வயது அடிப்படையில் பார்க்கும்போது 25 வயதிற்கு உட்பட்டவர்கள் 10 சதவீதம் பேரும், 50 வயதுக்கு உட்பட்டவர்கள் 33 சதவீதம் பேரும், 70 வயதுக்கு உட்பட்டவர்கள் 66 சதவீதம் பேரும் பாதிப்பிற்கு ஆளாவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது உழைக்கும் வயதில் இருப்பவர்கள் பெரும்பாலோர் இந்த நோய்க்கு ஆளாவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியாவை பொறுத்தவரையில் 15 வயதில் இருந்து 64 வயதுக்கு உட்பட்டவர்கள் உழைப்புகளில் ஈடுபடுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் 30 சதவீதம் பேருக்கு நோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

குறிப்பாக இளைஞர்கள் அதிகம் பேர் பாதிப்புக்கு ஆளாகும் நிலைக்கு ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# 14 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினரான கந்தையா வைத்தியநாதனுடைய மகன் புருசோத் மற்றும் அவரது மனைவி ஜியா லியு ஆகியோர் சுமார் 7000 அமெரிக்க டொலர்கள் (இலங்கை மதிப்பில் சுமார் 14 லட்சம் ரூபா) பெறுமதியான வைத்திய, பாதுகாப்பு உபகரணங்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

1000 அறுவை சிகிச்சை கையுறைகள், 1000 ஹி95 முகமூடிகள், 5000 அறுவை சிகிச்சை முகமூடிகள் ஆகிய பொருள்கள் வியாழனன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டன.

கந்தையா வைத்தியநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் யாழ் மாவட்ட அமைப்பாளராவார். இந்த இக்கட்டான காலத்திலும் அங்கஜன் இராமநாதனது முயற்சியால் விசேட விமானம் ஒன்று மூலம் இலங்கைக்கு இந்தஒ பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடதக்க விடயமாகும்.






# ‘தாயகம்’ அறக்கட்டளையின் தொடர் உதவி நடவடிக்கை!













அண்மைக்காலத்தில் தொடர் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட யாழ் மக்களுக்கு ‘தாயகம்’ அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூன்று கட்டங்களாக மொத்தம் 900 உலருணவு நிவாரணப் பொருள் பொதிகள் வழுங்கப்பட்டன. நிறுவனத்தின் நிறுவுநர் வீ. ரீதரன் முன்னின்று இந்த நடவடிக்களைத் தாமே நேரில் மேற்கொண்டார்.





# கிறீன் பீல்ட் சனசமூக நிலைய உதவி




கொரோனாவை ஒட்டிய ஊரடங்கால் தொழில் செய்ய முடியாது துயருற்றிருக்கும் 194 குடும்பங்களுக்க எட்டுத் தடவைகள் உலர் உணவுப் பொதிகளும் நிதி உதவியும் கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தினரால் வழங்கப்பட்டன. இதற்காக இரண்டு லட்சத்து இருபதாயிரம் ரூபாவை தாசன், பாபு, குயின்ரஸ், கருணா, மாதங்கி, வீனப்பு குடும்பத்தினர் மற்றும் விற்றர் குடும்பத்தினர் வழங்கி உதவியுள்ளனர்.







லவ்லி கிறீம் ஹவுஸ்

ஊரடங்கு நேரத்தில் சுகாதார முறைக்கு உட்பட்டு தரமான உணவு வகைகளை உங்கள் வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புக்கு:-021 314 3384, 077 366 4589, 077 087 2396



A9 வீதி சாவகச்சேரி

உங்களின் தேவைக்கு நீங்களே பயிரிடுங்கள்!

பண்ணையிலிருந்து திண்ணைக்கு
கற்பகவனம்
Farm to Home
யாழ்முற்றம்
செம்பா

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.



மிளகாய் - 50 நாற்றுகள் - 200/=
கத்தரி - 50 நாற்றுகள் - 250/=
தக்காளி - 50 நாற்றுகள் - 300/=

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளும் விற்பனைக்கு உண்டு.

வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குரங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்ரூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=
சிறகவரை 200/=
கறிமிளகாய் 200/=

வீட்டில் போதிய இடம் இல்லாதவர்கள் சாடிகளிலும் பயிரிடலாம்.



சாடி பெரியது - விட்டம் 34cm - 250/=
சாடி சிறியது - விட்டம் 28.5cm - 170/=
முள்ளுவிறாண்டி = 250/=, 400/=



யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

உங்களின் வீடுகளிற்கு விநியோகிக்கப்படும்.

விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

தொடர்புகளுக்கு: - 077 411 4422
www.yarlmuttam.com

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் இரு வீடுகள் சூறை அயலவர் கைது; ரூ.10 லட்சம் பொருள்கள் மீட்பு!



யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி பகுதியில் அமெரிக்கா மற்றும் கனடா குடியுரிமை பெற்ற குடும்பங்களின் இருவேறு வீடுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்ட நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த வீடுகளுக்கு அண்மையில் உள்ள வீட்டில் வசிப்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அந்த வீடுகளில் திருடப்பட்ட 9 லட்சத்து 45 ஆயிரம் பெறுமதியான பொருள்களும் சந்தேக நபரின் வீட்டிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு பின்புறமாக உள்ள வீதியில் இரண்டு வீடுகள் கனடா மற்றும் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களுக்கு சொந்தமானவை. அவர்கள் ஆண்டு தோறும் வருகை தந்த அந்த வீடுகளில் தங்கியிருந்துவிட்டு குடியுரிமை நாட்டுக்குத் திரும்பிவிடுவர்.

அதேபோல் அண்மையில் வந்து தங்கியிருந்துவிட்டு அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கும் கனடாவைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்கும் கடந்த மார்ச் மாதம் திரும்பி விட்டனர்.

இந்த நிலையில் வீடுகளைப் பராமரிப்பதற்கு ஒருவர் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று வியாழக்கிழமை அங்கு சென்ற பார்த்த போது இரண்டு வீடுகளும் உடைக்கப்பட்டு பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் உள்ளிட்டவை திருட்டுப் போயிருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளை வீடுகளின் கதவுகளை உடைத்து உட்புகுந்து வீட்டிலிருந்த விலையுயர்ந்த இலத்திரனியல் பொருள்கள் மரத் தளபாடங்கள் போன்ற 9 லட்சத்து 45 ஆயிரம் பெறுமதி மதிக்கத்தக்க பொருள்கள் திருடப்பட்டிருந்தமையை அவர் கண்டார்.

சம்பவம் தொடர்பில் வீட்டுப் பராமரிப்பாளரால் நேற்று யாழ்ப்பாணம் பெரும் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டது. விசாரணைகளை துரிதமாக முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் திருட்டு இடம்பெற்ற வீடுகளுக்கு மிக அண்மையாக உள்ள வீட்டு உரிமையாளரைக் கைது செய்தனர்.

அவரது வீட்டில் திருடப்பட்ட பொருள்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. சம்பவத்தையடுத்து சந்தேக நபர் விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குற்றப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி முனசிங்க தலைமையில் இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். விசாரணையின் பின் சந்தேக நபர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

## வெளிநோயாளர் பிரிவுக்கு வருவோரிடமும் சோதனை

கொழும்பு, ஏப்.25

வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வரும்
- சுவாச பிரச்சினை உள்ள
- நோயாளிகளின் மாதிரிகளைப்பெற்று கொரோனா தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதான தொற்றுநோய் தடுப்பு விசேட வைத்தியர் சுகத் சமரவீர இதுதொடர்பாக தெரிவிக்கையில் -

இந்த நடவடிக்கை அடுத்த வாரத்திலிருந்து 15 பிரதான வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகம் கூறினார்.

இதேவேளை, கொரோனா தொடர்பான 12 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் டொக்டர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

தேவைகளுக்கு அமைவாக பரிசோதனைகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும் என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



# வெளிமாவட்டங்களில் சிக்கியோரை சுகாதார முறைப்படி அவர்கள் குடும்பங்களுடன் விரைந்து இணைக்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்

எஸ்.நிதர்ஷன்



வெளிமாவட்டங்களில் சிக்கி உள்ளவர்களை சுகாதார முறைப்படி அவர்களது குடும்பங்களுடன் விரைவில் இணைக்க வேண்டியது அவசியமென யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொரோனோ பரவலைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உத்தரவு சில இடங்களில் தளர்த்தப்பட்டாலும் வெளிமாவட்டங்களில் சிக்கியுள்ளவர்கள் மீண்டும் தமது சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைவதற்கு பல முயற்சிகளை எடுக்கின்றனர்.

குறிப்பாக கணவரைப் பிரிந்த மனைவி, பிள்ளைகள் என்றும் தாய், தந்தையரைப் பிரிந்த பிள்ளைகள் என்றும் வெளி மாவட்டங்களில் பலர் சிக்கியுள்ளனர். இதனால் நீண்ட நாள்களாக தங்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைய முடியாமல் அவர்கள் இருக்கின்றனர். ஆகவே அவர்களை குடும்பங்களுடன் இணைத்து கொள்வதற்கு சுகாதார முறைப்படி ஒரு பொறிமுறை வகுக்கப்பட வேண்டும்.

குடும்பங்களை பல நாள்களாகப் பிரிந்து இருப்பவர்கள் தங்கள் குடும்பங்களைச் சந்தித்து இணைந்த கொள்ள முயற்சிப்பார்கள்.

ஆனால் அந்த முயற்சியானது சட்ட ரீதியாக இருக்க வேண்டுமே தவிர, ஒருபோதும் சட்டத்திற்கு முரணானதாக இருக்கக் கூடாது. அவ்வாறாக சட்டவிரோதமாக எடுக்கப்படும் முயற்சிகள் தவிர்க்கப் படுவதுடன் தடுத்து நிறுத்தப் பட வேண்டியதும் அவசியம்.

ஆகையினால் குடும்பங்களைப் பிரிந்திருப்பவர்களை மீள இணைப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏனெனில் வெளிமாவட்டங்களில் சிக்கியுள்ளவர்கள் மன உளைச்சலுக்கும் ஆளாவார்கள். அதனால் தங்களுக்கு ஏதும் நடந்தாலும் பரவாயில்லை குடும்பத்துடன் இணையவே முயற்சிப்பார்கள்.

இத்தகைய நிலைமையில் அவர்களைக் குடும்பங்களுடன் இணைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது. அதே நேரம் சட்டவிரோதமான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதும் தவிர்க்கப்பட வேண்டும். எனவே சுகாதார முறைப்படி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு பாதுகாப்பான முறையில் அவர்கள் மீளவும் குடும்பங்களுடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.– என்றார்.

# கடற்படையினர் குறித்து வீண் பீதி வேண்டாமாம்!

கொழும்பு,ஏப்.25

கடற்படையில் கடமையாற்றும் ஊழியர்கள் தொடர்பில் பொது மக்கள் தேவையற்ற சுகாதார ரீதியான பயத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என கடற்படை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை விடுத்து கடற்படை இதனை தெரிவித்துள்ளது.

கடற்படையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான 60 பேர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து குறித்த முகாமில் இருந்த நான்காயிரம் வீரர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனரா என்பதை அறிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களுடன் நெருங்கி பழகிய ஏனைய கடற்படை வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடுமுறையை இரத்துச் செய்துள்ளதாகவும் கீழ்மட்ட அங்கத்தவர்களை அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அறிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விடுமுறையில் இருக்கும் அல்லது முகாமுக்கு வெளியில் இருக்கும் நபர்கள் தொடர்பான தகவல்களை 0112 44 53 68 அல்லது 0117 19 22 51 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைத்து அறிந்துக்கொள்ள முடியும் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும் 0112 44 14 54 என்ற தொலைநகல் இலக்கத்திற்கும் 011 220 13 65 என்ற வட்ஸ் அப் இலக்கத்திற்கும் தொடர்பை ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என கடற்படை அறிவித்துள்ளது.

# காத்தான்குடி ஆஸ்பத்திரியைச் சுழ வீடுகளுக்கு கிருமிநாசினி தெளிப்பு

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையைச் சுற்றியுள்ள வீடுகளுக்கு கிருமிகளை அழிக்கும் மருந்துகளைத் தெளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



காத்தான்குடி நகர சபை, காத்தான்குடி சுகாதார அலுவலகம் என்பன இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை சுற்றியுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் அதனோடு அப்பகுதியிலுள்ள வீதிகளுக்கும் கிருமிகளை அழிக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில், காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.பசீர், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.றஹ்மத்துல்லாஹ் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் கே.எல்.எம்.பரீட் உட்பட அதிகாரிகள் ஈடுபட்டனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டு, அங்கு கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 307 8799




**காலைக்கதிர்** Kālaikkathir — மாலைப்பதிப்பு

விளம்பரம் [8cm x 5cm] பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)

தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 078 284 5000

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 411 4422



படம் 1



படம் 2



# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

படம் 1
டி. அபிலாஷ்- தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

படம் 2
டேவிராஜ் பிலெஷின் - தரம் 6
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - 'மல்லிகைப் பந்தல்'

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'மல்லிகைப் பந்தல்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எவ். ஸுமையா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

த. ஆரூசன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikathir

யானைக் கூட்டம்




தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

இன்று (25/04/2020) தலைப்பு
யானைக் கூட்டம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீளக் கூட்டும் விடயம்

# ஜனாதிபதிக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் நீதிமன்றுக்குக் கிடையாது என்கிறார் தயாசிறி!



## சுமந்திரனின் முயற்சி பலிக்காதாம்

கொழும்பு,ஏப்.25

கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தை நாடவுள்ளார் எனத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்விடயத்தில் ஜனாதிபதிக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இராஜகிரியவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் பரவலால் நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மே 11 ஆம் திகதி தபால் மூல வாக்கெடுப்பினை நடத்தலாம் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட்டது. எனினும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையால் அது முடியாமல் போனது. எனவேதான் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்தாலோசித்து ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்தது.

அத்தோடு மக்களின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கி தேர்தலுக்கு செல்லப் போவதில்லை என்பதே எமது நிலைப்பாடுமாகும். எனினும் நாட்டில் தேர்தல் நடத்தப்படுவதும் அத்தியாவசியமானதாகும். அரச நிதி முகாமைத்துவம் என்பவற்றில் இது தாக்கம் செலுத்தும். இதனை காரணமாகக் கூறி தற்போது நாடாளுமன்றம் செயற்படுவது அத்தியாவசியமானதாகும் என்ற நிலைப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவது அநாவசியமானது. தற்போதுள்ள நிலைமை சீராக்கப்பட்டதன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தினூடாக எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். அரசமைப்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய தேர்தலுக்கான திகதியை மேலும் நீடிக்க முடியும்.

இவ்விடயத்தில் – அதாவது தேர்தல் தினம் தொடர்பான விடயத்தில் – ஜனாதிபதி எந்த சந்தர்ப்பத்திலும் தலையிடவில்லை. மாறாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து செயற்பட்டார். எனவே தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தால் ஜனாதிபதிக்கு எவ்வித அழுத்தமும் பிரயோகிக்க முடியாது.

சுமந்திரன் போன்றோர் இவ்விடயத்தில் ஜனாதிபதியை உள்நுழைக்க முயற்சிப்பார்களானால் இது முற்றிலும் சட்ட விரோதமானதாகும். மனித உரிமைகளுடன் தொடர்புபடுத்தியே சுமந்திரன் நீதிமன்றத்தை நாடவுள்ளார் என்று சட்டத்தரணி என்ற ரீதியில் நான் எண்ணுகின்றேன். எவ்வாறிருப்பினும் ஜனாதிபகிக்கு உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றத்துக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகளால் நாடாளுமன்றத்தில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருந்தன. எனவே பழைய நாடாளுமன்றம் முக்கியமானதொன்றல்ல. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்க வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடாக இருந்தது.

இன்று நிதியுதவியளித்து ஒத்துழைக்க தயார் என்று கூறும் ஐக்கிய தேசிய கட்சி அன்று இடைக்கால வரவு – செலவு திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கத் தாயராக இருக்கவில்லை. கொரோனா ஒழிப்பிற்காக ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டுள்ள அனைத்து வேலைத் திட்டங்களையும் தோல்வியடையச் செய்வதே ஐக்கிய தேசிய கட்சியின் நோக்கமாகும். – என்றார்.




## கசிப்பைப் பைக்கற்றுக்களில் அடைத்து விற்பனை செய்த இருவர் நேற்றுக் கைது

கசிப்பைப் பைக்கற்றுக்களில் அடைத்த. விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேரை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வியாபாரம் நடைபெறுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இந்தக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்திற்கிடமாக சைக்கிளில் சென்ற இருவரைச் சோதனையிட்டுள்ளனர். அப்போது இரு சந்தேக நபர்களிடமிருந்தும் பைக்கற்றுகளில் அடைக்கப்பட்ட கசிப்பைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து சிறிய சிறிய பைக்கற்றுகளில் அடைக்கப்பட்ட 6 லீட்டர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2020 இல் வெளியிடப்பெற்றது.